செய்தி வெளியீட்டு எண். 352 நாள் 05.07.2009

## பத்திரிக்கை செய்தி

### முழுநேர நியாயவிலைக் கடைகளையும் பகுதி நேர நியாய விலைக் கடைகளையும் திறந்து வைத்து பொது விநியோகத் திட்ட செயல்பாடு குறித்து மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ.வேலு ஆய்வு.

. . . .

பொது விநியோகத்திட்ட செயல்பாடு குறித்து மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் இன்று 05.07.2009 காலை 10.00 மணிக்கு மாண்புமிகு ஊரகத்தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.பொங்கலூர் நா.பழனிச்சாமி அவர்களுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வுக் கூட்டத்தில் உணவுப் பொருள் வழங்கல் துறை அலுவலர்கள், வருவாய்த்துறை அலுவலர்கள் மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் பங்கு பெற்றனர்.

ஆய்வுக் கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாக கூட்டுறவு நியாயவிலைக் கடைகளுக்கு விற்பனையாளராக தேர்வு செய்யப்பட்ட 10 நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கினார்கள். ஆய்வுக் கூட்டத்தை தொடங்கி வைத்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 27 நியாயவிலைக்கடைகளில் 2000 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருக்கிறது. இந்த நியாய விலைக்கடைகளை இரண்டாக பிரிக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். பொது மக்களின் நலன் கருதி இன்று புதியதாக 5 முழு நேரக் கடைகளும் 3 பகுதி நேரக் கடைகளும் துவக்கிவைக்கப்படுகிறது என்று தெரிவித்த உணவு அமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டிலுள்ள 30061 நியாய விலை கடைகளில் இந்த அரசு பதவியேற்றபின் 151 முழுநேர நியாயவிலைகடைகளும் 1266 பகுதி நேரக் கடைகளும் துவக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்கள்.

வழித்தடம் ஆண்டிற்கு ஒருமுறை மாவட்ட ஆட்சியரிடம் ஒப்புதல் பெறவேண்டும் என்றும் கூட்டுறவுத்துறை மண்டல இணைப்பதிவாளர்கள், துணைப்பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்), மாவட்ட வருவாய் அலுவலர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர்கள், கோட்டாட்சியர்கள் ஆகியோர் கிடங்குகளுக்குச் சென்று ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்று 01.06.2009 அன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டபடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்று ஆய்வு செய்தார்கள். அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் மின்னனு தராசுகள் பயன்படுத்துவதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதிக்குள் ஒதுக்கீட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டு நியாயவிலைக் கடைகளுக்கு அனுப்பப்பட வேண்டும். ஒதுக்கீட்டு ஆணையின்படி கிடங்கு பொறுப்பாளர்கள் நியாயவிலைக் கடைதோறும் வழங்கல் நமுனா போடுவதுடன் லாரிகளில் வழித்தடம் எழுதப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். 60 நாட்களுக்குள் குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டும். காலதாமதம் செய்யக்ககூடாது. மனுதாரர்களை அலைக்கழிக்கக்கூடாது. அன்பாக நடத்தப்படவேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். நியாய விலைக்கடைகளில் உள்ள அ பதிவேட்டினையும், வட்ட வழங்கல் அலுவலகத்தில் உள்ள அ பதிவேட்டினையும் ஒத்திசைவு செய்து பார்க்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

சிறப்பு பொது விநியோகத்திட்டம் விலைவாசியை கட்டுப்படுத்துவதற்குதான் கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் தான் விலைவாசி கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நியாயவிலைக்கடைகளில் இதுவரை மாதம் ஒன்றுக்கு 2500 டன் கோதுமை அரைக்கப்பட்டு வழங்கப்பட்டு வந்தது. இந்த மாதம் முதல் 5000 மெ.டன் கோதுமை அரைக்கப்பட்டு வழங்கப்படும். துவரம்பருப்பு, உளுந்தம் பருப்பு, பாமாயில் 10 பொருட்கள் அடங்கிய மளிகைப் பொருட்கள் பாக்கெட்டுகள் போன்றவை அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்கள். மக்கள் குறைதீர்க்கும் கூட்டங்களில் பெறப்படும் மனுக்களை உடனுக்குடன் தீர்வு செய்ய வேண்டும். பகுதி நேரக்கடை கோரி பெறப்படும் மனுக்களை உடனுக்குடன் தீர்வு செய்ய வேண்டும் என்றும், கிடங்குகளிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச்செல்ல முதன்மைச் சங்க பணியாளர்கள் மட்டுமே அனுப்பப்பட வேண்டும் என்றும், சிறப்பு பொது விநியோகத்திட்டத்தில் வழங்கப்படும் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு போன்றவற்றின் உண்மையான தேவையை கணக்கிட்டு தேவைப்பட்டியலை மாவட்ட வழங்கல் அலுவலருக்கு அனுப்ப வேண்டும். சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து நியாய விலைக்கடைகளுக்கு கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நியாயவிலைக் கடைகளில் உள்ள காலிப்பணியிடங்கள் நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

ஆண்டுக்கு ஒருமுறை தமிழ் நாட்டிலுள்ள கிடங்குகள் பார்வையிடப்பட்டு சுத்தமாக வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் கிடங்கு பொறுப்பாளர்களுக்கு பரிசு வழங்கப்படும். அரிசி மூட்டைகளை தைக்க அந்தந்த மாதத்திற்குரிய கலர் நூல் பயன்படுத்தப்படுகிறதா என்பதை மண்டலமேலாளர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும். கிழிந்து போன பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள கோணிப்பைகளை தவிர்க்க வேண்டும். கிடங்குகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்து கணிணிகளை பயன்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். மேலும் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட வழித்தடத்தில் தவிர்க்க முடியாத காரணங்களினால் அத்தியாவசியப் பொருட்கள் அனுப்பப்படவில்லை என்றால், அதன் விவரத்தினை மாவட்ட ஆட்சியருக்கு தெரிவித்து மீண்டும் எந்த தேதியில் எந்த வழித்தடத்தில் அனுப்பப்பட வேண்டும் என்பதற்கு மாவட்ட ஆட்சியரிடம் ஒப்புதல் பெறவேண்டும் என்றும், கிடங்குகளில் உள்ள பாயிண்ட் கிளர்க்குடன் முதன்மை சங்க பிரதிநிதிகள் எடை இயந்திரங்கள், எடைகற்கள் ஆகியவற்றை சோதனை செய்து சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்து, எடை போடப்பட்ட அரிசி மூட்டைகளில் எடை சரியாக உள்ளது குறித்து உரிய பதிவேட்டில் தினந்தோறும் குறிப்பு எழுத வேண்டும் என்று ஆணையிட்டார்கள்.

இந்த ஆய்வு கூட்டத்தில் திரு.க.சண்முகம் இ.ஆ.ப. அரசுச் செயலாளர் கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புகத்துறை, திரு.வெ.சந்திரசேகரன் இ.ஆப. இணை ஆணயைர் உணவுப் பொருள் வழங்கல் துறை, திரு.எம்.வீரசண்முகமணி இ.ஆ,ப. நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், திரு,பு.உமாநாத் இ.ஆ.ப. மாவட்ட ஆட்சியர், திரு.ட்டி.திருவேங்கடம் பொது மேலாளர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் திரு.கோவை தங்கம் ஆகியோர் பங்கு பெற்றனர்..

*****

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை.